**செங்கோட்டை நகர்மன்றத்தின் சிறப்புக் கூட்டம் 22.07.2022 அன்று காலை 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்**

**மன்றப்பொருள் : 01**

செங்கோட்டை நகராட்சி நகர்மன்றத் தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக ஈப்பு வாகனம் வாங்கப்பட வேண்டும் என நகர்மன்ற தீர்மான எண்:14, நாள்:11.04.2022ல் அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் ஸ்காபியோ ஈப்பு வாகனம் ரூ.16,82,000/– மதிப்பீட்டிலும், நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக ஒரு Bolero ஈப்பு வாகனம் ரூ.827742/- மதிப்பீட்டிலும் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:10327/2022/எம்3, நாள்:17.05.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கான முழு செலவினத்தையும் குடிநீர் நிதியில் செலவிடவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஈப்பு வாகனங்களை வாங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதிக் கோரி 20.06.2022ம் நாளைய நகர்மன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. இப்பொருள் தொடர்பாக நகர்மன்ற தீர்மானம் எண்:74, நாள்:20.06.2022ன்படி தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தினை மறுபரிசீலனை செய்வதற்காக மன்றத்தின் அனுமதிக்கு மீள வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்ற தீர்மானம் எண் 14 நாள்:11.04.2022ன்படி ஏற்கனவே அனுமதி வழங்கியதின் அடிப்படையில்தான் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு அதன்பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை மூலம் வரைவு கொள்முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு ஸ்கார்பியோ வாகனம் 1ம், ஆணையர் பயன்பாட்டிற்கு பொலிரோ வாகனம் 1ம் வாங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. இதற்கான செலவினம் குடிநீர் நிதி மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 112**

மன்றத்தின் அலுவலக குறிப்பை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. நகராட்சியில் தீர்வு செய்யப்பட வேண்டிய கடன்கள் உள்ளன. அவை :

| | | |
|---|---|---|
| 1. | குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கட்டணம் | ரூ.70.15 லட்சம் |
| 2. | மின் கட்டண பாக்கி | ரூ.30.1 லட்சம் |
| 3. | நகராட்சி கடன்கள் | ரூ.364.01 லட்சம் |
| 4. | நகராட்சி அலுவலக முன்புற கட்டிடம் இடிந்து உயிர் விட்டவர்களுக்கு நகராட்சி வழங்க வேண்டிய தொகை | ரூ.30.11 லட்சம் |
| | **மொத்த தொகை** | **ரூ.494.36 லட்சம்** |

அலுவலகத்திற்கு 494.36 லட்சம் கடன் உள்ளதாலும், பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்வதற்கு போதிய நிதி இல்லை என்பதாலும் தற்போது வாகனங்கள் புதிதாக தேவையில்லை என பெரும்பாலான நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியதால் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வாகனங்கள் வேண்டாம் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி